அமெரிக்கத் தமிழ் கல்விக்கழகம்

American Tamil Academy

# மழலை நிலை கையேடு

## Mazhalai - Hand Book

3/19/2014

கீதா மாரியப்பன்

# அமெரிக்கத் தமிழ்க் கல்விக்கழகம்


# AMERICAN TAMIL ACADEMY

## மழலை பாட நூல்

## பள்ளி ஆண்டு: 2012-13

www.americantamilacademy.org / www.amtaac.org

*Email:* support@amtaac.org



# *மழலை நிலை பாடத்திட்டங்கள்*

- வயது வரம்பு:
  - நான்கு முதல் ஐந்து வயது வரை
- தகுதி:
  - அடிப்படைத் தகுதி எதுவும் தேவையில்லை

பாடத்திட்டம்:

- மொழித் திறன்:
  - அறிமுகம் உயிர் எழுத்துகள் மற்றும் ஆயுத எழுத்து
- கணிதம்:
  - எண்கள்: ஒன்று முதல் பத்து வரை
  - வடிவங்கள்




- பொது அறிவு:
  - காய்கள், பழங்கள், விலங்குகள், கடல் வாழ் உயிரினங்கள், நிறங்கள்
- அறிவியல்:
  - சுவைகள், திசைகள், உடல் உறுப்புகள், வானம், பூச்சிகள், தாவரம், ஊர்வன, பருவ காலம்
- எழுத்துப் பயிற்சி:
  - எளிய முறையில் எழுத மற்றும் படங்கள் வரைய பயிற்சி.
- பேச்சுப் பயிற்சி:
  - குழுக்களாக சேர்ந்து பாடுதல், உரையாடுதல் மற்றும் பொதுஅறிவுக் கதைகள் பகிர்தல்
- உச்சரிப்புப் பயிற்சி:
  - வாக்கியங்களைத் தெளிவாக உச்சரித்தல்.

இந்த நிலையில் மாணவர்கள் உயிர் எழுத்துகள், சில பாடல்கள் மற்றும் கதைகளுடன் சுமார் ஐம்பது எளிய சொற்களை பயில்வர்.

## <u>கல்வியாண்டில் பள்ளியில் பின்பற்ற வேண்டியவை:</u>

- அமெரிக்காவில் நடந்துவரும் பல தமிழ்ப்பள்ளிகளின் உதவியுடன் பாடத் திட்டம் தயாரிக்கப்பட்டது.
- மொத்தம் 25 பாடங்கள் மற்றும் அதற்கான பயிற்சிகள்.
- மூன்று பருவங்களாகத் தேர்வு நடத்தப்படும்.
- வகுப்பறைக்கு வருவது, வீட்டுப்பாடங்கள் நிறைவுடன் செய்வது
- மற்றும் மூன்று பருவத் தேர்வுகளில் பெற்ற மதிப்பெண்கள் ஆகிய அனைத்தையும் ஆண்டு இறுதியில் மாணாக்கரின் தமிழறிவை அறிய பயன்படுத்தப்படும்.
- 25 வகுப்பறைப் பாடங்கள் (தலா 2 மணி நேரம்) + 3 பருவ தேர்வுகள் = மொத்தம் 28 வகுப்புகள்
- 2 மணி நேர வகுப்புகள் கற்பிக்க பரிந்துரைக்கப்படுகிறது.

## <u>கல்வியாண்டில் வகுப்பில் பின்பற்ற வேண்டியவை:</u>

- 2 மணி நேர கால அட்டவணை (முழு நேரமும் தமிழில் உரையாடல்).
- தமிழ்த்தாய் வாழ்த்து – 5 நிமிடம்
- தமிழில் உரையாடல், கடந்த வாரம் வீட்டில், பள்ளியில் நடந்தது - 10 நிமிடம்
- வரைதல் மற்றும் எழுத்துப்பயிற்சி (பாடத்திட்டபடி) -20 நிமிடம்

- 10 நிமிடம் இடைவேளை (சிறு தின்பண்டங்கள்)
- பொது அறிவு: கலாச்சாரம், பழக்க வழக்கங்கள் -15 நிமிடம்
- கதை அல்லது குழுவாக சேர்ந்து கற்றல் - 20 நிமிடம்
- பாடல்கள் கற்றல் - 20 நிமிடம்
- உச்சரிப்புப் பயிற்சி - 15 நிமிடம்

**<u>கல்வியாண்டில் வீட்டில் பின்பற்ற வேண்டியவை:</u>**

- தினமும் 30 நிமிடங்கள் தமிழ் பாடங்களைப் படிக்க வேண்டும்.
- கடந்த வாரம் பள்ளியில் படித்த பாடங்களைப் பற்றி தமிழில் உரையாடவும்.
- வரைதல் மற்றும் எழுத்துப்பயிற்சிக்கு உதவி செய்யவும்.
- பொது அறிவு - கலாச்சாரம், பழக்க வழக்கங்கள் பற்றி தமிழில் உரையாடவும்.
- படங்களைப் பார்த்து கதையை தமிழில் கூற பயிற்சி செய்யவும்.
- பாடல்களை மனப்பாடம் செய்யவும்.
- ஏதேனும் பொது தலைப்பைக் குறித்து கலந்துரையாடவும்.
- திரைப்படங்கள், பாடல்கள், சிறு உரையாடல் முதலிய தமிழ் மொழி சார்ந்த ஊடகங்களை பயன்படுத்தலாம்.

# பாடநூல் பொருளடக்கம்


- வகுப்பு - 1
  - வரைந்து பழகுக, எண்கள் 1, 2, குவா குவா வாத்து, எறும்பும் புறாவும்
- வகுப்பு - 2
  - வரைந்து பழகுக, எண்கள் 3, 4, பள்ளிக் கூடம், நினைத்தது என்ன?
- வகுப்பு - 3
  - அ - ஔ அறிமுகம், எண்கள் 5, 6, நிலா நிலா வா வா, ஆமையும் முயலும்
- வகுப்பு - 4
  - அ, வரைந்து பழகுக, எண்கள் 7, 8, அணிலே அணிலே ஓடி வா, வடிவங்களை வரைவோம்
- வகுப்பு - 5
  - ஆ, வரைந்து பழகுக, எண்கள் 9, 10, கைவீசம்மா, தாகம் தணிந்த காகம்
- வகுப்பு - 6
  - இ, எண்கள் 1-10, எண்கள், வரைவோம் விளையாடுவோம்
- வகுப்பு - 7
  - ஈ, காய்கள், கம்பை போல, ஏமாறமாட்டேன்
- வகுப்பு - 8
  - அ - ஈ மீள்பார்வை, பழங்கள், மாம்பழமாம் மாம்பழம், எங்கள் ஊர் சந்தை
- வகுப்பு - 9
  - எழுத்தை கண்டறிக, வார நாட்கள், திங்கள்கிழமை, குரங்கும் குல்லாய்காரனும்
- வகுப்பு - 10
  - உ, விலங்குகள், வீடும் காடும், ஏன் இந்த ஓட்டம்
- வகுப்பு - 11
  - ஊ, கடல் வாழ் உயிரினங்கள், பூனையக்கா பூனையக்கா, சிங்கமும் சுண்டெலியும்
- வகுப்பு - 12
  - எ, ஒலிகள், கச்சேரி, படித்தலுக்கு ஆயத்தம்
- வகுப்பு - 13
  - ஏ, உறவுகள், தோசையம்மா தோசை, காகமும் நரியும்

- ❖ வகுப்பு - 14
  - ஐ, என் உடல் உறுப்புகள், எனக்குக் கைகள், சுண்டெலி, படத்தைப் பார்த்து பயன்களைக் கூறுக
- ❖ வகுப்பு - 15
  - உ - ஐ மீள்பார்வை, திசைகள், ஆறு பாரு ஆறு, வால் தேடிய பல்லி
- ❖ வகுப்பு - 16
  - உ -ஐ எழுத்தை கண்டறிக, எதிர்பதங்கள், கருப்பு யானை, நாய்க்குட்டி, விடுகதைப் பாடல்
- ❖ வகுப்பு - 17
  - அ - ஐ மீள்பார்வை, சதுரமான இருக்கை, வடிவங்கள், படகு உருவனாது
- ❖ வகுப்பு - 18
  - ஒ, பருவ காலம், தவளையாரே தவளையாரே, வீடு கட்டுவோம்
- ❖ வகுப்பு - 19
  - ஓ, சுவைகள், பஞ்சு மிட்டாய், கப்பல், சுவைகள்
- ❖ வகுப்பு - 20
  - ஔ, நிறங்கள், கடமுட கடமுட வண்டி, படத்தில் உள்ள பொருள்களை கொண்டு கதை கூறு
- ❖ வகுப்பு - 21
  - ஃ - என் குடும்பம், தாவரம், என் தோட்டம், அறிஞர் நியூட்டன்
- ❖ வகுப்பு - 22
  - ஒ - ஃ மீள்பார்வை, பணியாளர்கள், அஞ்சல்காரர் வருகிறார், படத்துடன் இணைத்து கதையைப் படி
- ❖ வகுப்பு - 23
  - ஒ - ஃ எழுத்தை கண்டறிக, வானம், ஆத்திச்சூடி, பாடல் தனித்திறமை
- ❖ வகுப்பு - 24
  - அ - ஃ மீள்பார்வை, ஊர்வன, நத்தையாரே, கதை தனித்திறமை
- ❖ வகுப்பு - 25
  - அ - ஃ எழுத்தை கண்டறிக, பூச்சிகள், பட்டாம்பூச்சி, பேச்சுத்திறன்

| மழலை நிலை பாடத்திட்டத்தின் திறன் பகுதிகள்<br>வயது வரம்பு: மூன்றரை வயது முதல் ஐந்து வயது வரை | |
|---|---|
| **திறன் பகுதி** | **திறன்** |
| **பார்த்தறிதல்** | படங்களைப் பார்த்துப் பெயர்களைக் கூறுதல். |
| **கேட்டல்** | ஓசை நயமிக்க மழலை பாடல்களைக் கேட்டல். |
| **பேசுதல்** | குழுக்களாக சேர்ந்து பாடுதல் மற்றும் உரையாடுதல். |
| **படித்தல்** | உயிரெழுத்துகள் மற்றும் ஆயுத எழுத்தைப் படித்து, அடையாளப்படுத்துதல். |
| **எழுதுதல்** | நேர்கோடு, வளைகோடு, சாய்வுகோடுகளை வரைதல். எளிய முறையில் எழுத்துக்களை எழுத மற்றும் படங்கள் வரைய பயிற்சி. |
| **படைப்பாற்றல்** | படங்களுக்குப் பொருத்தமான வண்ணம் தீட்டுதல். வரைத்து காட்டுதல். |
| **நடைமுறை இலக்கணம்** | ஒத்த ஓசையுடைய சொற்களை இனங்காணல். குறில், நெடில் எழுத்துகளை அறிதல். |
| **கணிதம்** | எண்கள்: ஒன்று முதல் பத்து வரை, வடிவங்கள். ஒருமை, பன்மை அறிதல் |
| **அறிவியல்** | சுவைகள், உடல் உறுப்புகள், வானம், பூச்சிகள், தாவரம், ஊர்வன, பருவ காலம். |

| | |
|---|---|
| பொது அறிவு | பொது அறிவுக் கதைகள். காய்கள், பழங்கள், விலங்குகள், கடல் வாழ் உயிரினங்கள், நிறங்கள்,என் வீடு, என் குடும்பம். |
| உச்சரித்தல் | உச்சரிப்புப் பயிற்சி, வாக்கியங்களை தெளிவாக உச்சரித்தல். |

**மழலை தேர்வு மற்றும் திறனாய்வு முறை:**

- மழலை நிலையில் தேர்வு மற்றும் திறனாய்வு, அமெரிக்கத் தமிழ் கல்விக்கழகத்தின் கோட்பாடுகளுக்கு உட்பட்டது.
- மற்ற நிலையைப் போலவே மூன்றுப் பருவத் தேர்வுகள் நடத்தப்படுகின்றது.
- வினாத்தாள், வாய் மொழித் தேர்வு மற்றும் எழுத்துத் தேர்வு என்ற இரண்டு பிரிவாக, மொத்தம் 45 நிமிடங்கள், நூறு மதிப்பெண்களுக்கு நடத்தப்படும்.
- முதல் பருவத் தேர்வு ஒன்று முதல் ஒன்பது பாடங்கள், பாடநூல் மற்றும் பயிற்சி நூலில் கொடுக்கப்பட்ட பாடத்திட்டத்தில் இருந்து கேட்கப்படும்.
- இரண்டாம் பருவத் தேர்வு பத்து முதல் பதினேழாம் பாடம் வரையுள்ள அனைத்துப் பாடங்களும் 80% (பாடநூல் மற்றும் பயிற்சி நூலில் கொடுக்கப்பட்ட பாடத்திட்டத்திலுள்ளவை) மற்றும் ஒன்று முதல் ஒன்பது பாடங்கள் (20%), பாடநூல் மற்றும் பயிற்சி நூலில் கொடுக்கப்பட்ட பாடத்திட்டத்தில் பாடல்கள் மற்றும் கதைகளை தவிர அனைத்து பாடங்களில் இருந்தும் கேட்கப்படும்.
- மூன்றாம் பருவத் தேர்வு பதினெட்டு முதல் இருபத்தி ஐந்தாம் பாடம் வரையுள்ள அனைத்து பாடங்களும் 60% (பாடநூல் மற்றும் பயிற்சி நூலில் கொடுக்கப்பட்ட பாடத்திட்டத்திலுள்ளவை) மற்றும் ஒன்று முதல் பதினெழாம் பாடங்கள் (40%), பாடநூல் மற்றும் பயிற்சி நூலில்


கொடுக்கப்பட்ட பாடத்திட்டத்தில் பாடல்கள் மற்றும் கதைகளை தவிர அனைத்து பாடங்களில் இருந்து கேட்கப்படும்.

- 9, 17 மற்றும் 25ஆம் பாடத்தின் இறுதியில், ஒவ்வொரு பருவத் தேர்வுகள் நடத்த அமெரிக்கத் தமிழ் கல்விக்கழகத்தில் பரித்துரைக்கப்படுகிறது.

மழலை பாடப்பகுதியை 6 பிரிவுகளாக பிரிக்கலாம்:

- எழுத்துப்பயிற்சி.
- பாடல்கள்.
- கதைகள் / குழுவாக கற்றல்.
- பொது அறிவு.
- எழுத்துகளைக் கற்றல்.
- உச்சரித்தல்.

### எழுத்துப் பயிற்சி




பேனா அல்லது markers உதவியுடன் எழுத்துக்களை தனியாக ஒரு குறிப்பேடிலோ அல்லது ஒரு காகிதத்துலோ அல்லது எழுத்துப்பயிற்சியேட்டிலோ எழுதி, பின் அதன் மீது எழுத பயிற்சிக் கொடுக்கலாம்.

அந்த வகுப்பிற்குறிய எழுத்தை மட்டுமின்றி, முந்தைய வகுப்பில் படித்த எழுத்துகளையும் சேர்த்துப் பயிற்சிக் கொடுக்கலாம்.

அந்த வார எழுத்தைக் கற்பிக்கும் முன் முந்தைய வகுப்பில் படித்த எழுத்துகளை உச்சரித்து எழுத பயிற்சிக் கொடுக்கலாம்.


இவ்வாறு செய்யும் நிலையில் மாணாக்கருக்கு முத்தைய வகுப்பில் படித்த எழுத்துகளையும் சேர்த்து எழுதவும், படிக்கவும், நினைவில் கொள்ளவும் பெரிதும் உதவும்.

இவ்வாறு ஒவ்வொரு வாரமும் வரைதல் மற்றும் எழுத்துப்பயிற்சியை (பாடத்திட்டபடி) 20 நிமிடம் பயிற்சிக் கொடுக்கலாம்.

### பாடல்கள்

மழலை பாடநூலில் உள்ள பாடல்களில் பெரும்பான்மையான பாடல்கள் ஆறு முதல் எட்டு வரிகளைக் கொண்டது.

மாணாக்கரின் மனதில் எளிதில் பதியும் வண்ணம் மற்றும் அந்த வாரத்தில் பயிலும் தலைப்பினை சார்புடைய பாடல்களாக அமைக்கப்பட்டுள்ளது.


பாடம் 23

பாடல் தனித்திறமை:

- குவா குவா வாத்து
- பள்ளிக் கூடம்
- நிலா நிலா வா வா
- அணிலே அணிலே ஓடி வா
- கைவீசம்மா
- எண்கள்
- கம்பைப் போல
- மாம்பழமாம் மாம்பழம்
- திங்கள்கிழமை
- பள்ளி செல்வோம் வாராய்
- பூனையக்கா பூனையக்கா
- கச்சேரி
- தோசையம்மா தோசை
- எனக்குக் கைகள் இரண்டு
- ஆறு பாரு ஆறு
- நாய்க்குட்டி
- வடிவங்கள்
- தவளையாரே தவளையாரே
- பஞ்சு மிட்டாய்
- கடமுட கடமுட வண்டி
- என் தோட்டம்
- அஞ்சல்காரர் வருகிறார்

***பாடல்களை கற்பிக்கும் முறைகள்:***


பாடம் 8

மாம்பழம்

மாம்பழமாம் மாம்பழம்
மல்கோவா மாம்பழம்;

சேலத்து மாம்பழம்
தித்திக்கும் மாம்பழம்;

அழகான மாம்பழம்
அல்வா போல மாம்பழம்;

உங்களுக்கு வேண்டுமா?

இங்கே ஓடி வாருங்கள்;
பங்கு போட்டுத் திங்கலாம்.

- பாடதிட்டத்தில் கொடுக்கப்பட்ட பாடல்களுக்கு ஒலி மற்றும் ஒளி நாடா இருப்பின் அதனை பயன்படுத்தலாம்.
- பாடல் வரிக்கு ஏற்ற செய்கையைச் செய்து காட்டி, அதனை திரும்ப செய்ய எடுத்துரைக்கலாம்.
- பாடலில் கூறப்படும் பொருட்களை கொண்டு வந்து, அதனை மாணாக்கரிடம் காட்டி சொல்லிக் கொடுக்கலாம்.
- ஒவ்வொரு வாரம் கொடுக்கப்பட்ட பாடல்கள் மட்டுமின்றி அதற்கு முந்தைய வாரத்தில் கொடுத்துள்ள பாடல்களையும் சேர்த்து கற்றுத்தருவதன் மூலம், மாணாக்கர் எளிதில் அந்த பாடல்களை கற்றுக் கொள்ள உதவும்.
- செய்கையின் மூலம் கற்றுக் கொள்வதால் பாடல் வரிகள் நினைவில் இல்லாத தருணத்திலும், அவர்களால் பாடலை முழுவதும் உணர்ந்து பாடி நிறைவு செய்ய இயலும்.

### கதைகள்



பாடம் 11

சிங்கமும் சுண்டெலியும்

அமெரிக்கத் தமிழ்க் கல்விக்கழகம் (ATA) - மழலை நிலைப் பாடங்கள்

குழுவாக கற்றல்



பாடம் 16

விடுகதைப் பாடல்கள்

கூரை மேலே ஏறி நிற்கும்,
குப்பை எல்லாம் கிளறி நிற்கும்,
வீரமுடனே சண்டையிடும்,
விடியுமுன்னே எழுப்பி விடும்!
அது என்ன?

வீதியிலே வெள்ளிப் பணம்,
விட்டு, விட்டு மின்னும் பணம்,
பகலில் தொலைந்த பணம்,
இரவில் கிடைத்த பணம்.
அது என்ன?

பிறக்கும் போது வால் உண்டு,
இறக்கும் போது வால் இல்லை,
தண்ணீரிலும் இருப்பான்,
தரையிலும் இருப்பான்.
அவன் யார்?


காலையில் வருவான்,
மாலையில் மறைவான்,
மழை பொழிந்தால் மறைந்துவிடுவான்.
அவன் யார்?

அண்ணன், தம்பி மூவராம்,
இருந்த இடத்தில் ஓடுவார்,
இரவு, பகல் உழைப்பார்,
அவர் யார்?

குறிப்பு:
ஆசிரியர்கள் சிறுசிறு விளக்கள் மூலம் விளக்கி மாணாக்கரிடம் அது என்ன என்பதைக் கேட்டுப் புரிதலை விளக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். இதே போன்று மற்ற பொருட்களைச் சிறுசிறு விளாக்களாகக் கேட்டுப் புதிர் விளையாட்டாகவும் விளையாடலாம்.
உதாரணம்: நான்கு காலில் நடப்பாள், பாலூட்டி மகிழ்வாள் - பசு

அமெரிக்கத் தமிழ்க் கல்விக்கழகம் (ATA) - மழலை நிலைப் பாடங்கள்

பொது அறிவு




## எழுத்துகளைக் கற்றல்




## உச்சரித்தல்

### *உச்சரிப்புப் பயிற்சி*

- *பையை திற.*
- *புத்தகத்தை எடு.*
- *பக்கங்களை புரட்டு.*
- *எழுதுகோலை எடு.*
- *புத்தகத்தில் எழுது.*
- *படம் வரை.*

*ஆசிரியர் குறிப்பு:*
*மாணாக்கரை தெளிவாக உச்சரிக்கப் பயிற்சி கொடுக்கவும். மனப்பாடம் செய்யத் தேவையில்லை.*

திறன் பகுதி

பார்த்தறிதல்

திறன்

படங்களைப் பார்த்துப் பெயர்களைக் கூறுதல்



**திறன் பகுதி**

**கேட்டல்**

திறன்

ஓசை நயமிக்க மழலை பாடல்களைக் கேட்டல்.

**நிலா**

***நிலா நிலா ஓடிவா !***
***நில்லாமல் ஓடிவா !***
***மலை மேலே ஏறிவா !***
***மல்லிகைப் பூ கொண்டுவா !***
***பட்டம் போலப் பறந்துவா !***




*பம்பரம் போல் சுற்றிவா !*

**திறன் பகுதி**

**பேசுதல்**

திறன்

குழுக்களாக சேர்ந்து பாடுதல் மற்றும் உரையாடுதல்.


பாடம் 8

எங்கள் ஊர் சந்தை

குறிப்பு:

சந்தையில் காணும் பொருட்களைப் பற்றியும், அதை வாங்கும் முறை பற்றியும் கலந்து உரையாடவும். ஆசிரியர் சிறுசிறு வரிகளாகக் கூறிய பின் சிறுசிறு வினாக்கள் மூலம் விளக்கம் கேட்டுப் புரிதலை விளக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அமெரிக்கத் தமிழ்க் கல்விக்கழகம் - மழலை நிலைப் பாடங்கள் 34


பாடம் 12

விளையாடி மகிழ்வோம்!!!

குறிப்பு:

ஆசிரியர், பாடத்திறன் வெளிப்படுமாறு வினாக்கள் கேட்கவும்.

உதாரணம்

- நீ எப்பொழுது விளையாடுவாய்?
- உனக்குப் பிடித்த விளையாட்டு எது?
- நீ நாள்தோறும் விளையாடும் விளையாட்டு எது?
- உனக்குத் தெரிந்த விளையாட்டுகள் எவை?
- படத்தில் என்னென்ன விளையாட்டுகள் கொடுக்கப்பட்டுள்ளன?


அமெரிக்கத் தமிழ்க் கல்விக்கழகம் - மழலை நிலைப் பாடங்கள்

**திறன் பகுதி**

**படித்தல்**

திறன்

உயிரெழுத்துகள் மற்றும் ஆயுத எழுத்தைப் படித்து, அடையாளப்படுத்துதல்.







**திறன் பகுதி**

**எழுதுதல்**

திறன்

நேர்கோடு, வளைகோடு, சாய்வுகோடுகளை வரைதல். எளிய முறையில் எழுத்துக்களை எழுத மற்றும் படங்கள் வரைய பயிற்சி.










**திறன் பகுதி**

**படைப்பாற்றல்**

திறன்

படங்களுக்குப் பொருத்தமான வண்ணம் தீட்டுதல். வரைந்து காட்டுதல்










**திறன் பகுதி**

**நடைமுறை இலக்கணம்**

திறன்

ஒத்த ஓசையுடைய சொற்களை இனங்காணல். குறில், நெடில் எழுத்துக்களை அறிதல்.

**படத்தின் பெயரைக் கூறி ஒலித்துப் பழகுக, சரியான எழுத்தை வட்டமிடுக**





# அ ஆ அ ஆ அ ஆ






# அ ஆ அ ஆ அ ஆ


**திறன் பகுதி**


**கணிதம்**

திறன்

எண்கள்: ஒன்று முதல் பத்து வரை, வடிவங்கள். ஒருமை, பன்மை அறிதல்





**திறன் பகுதி**

**அறிவியல்**

**திறன்**

சுவைகள், உடல் உறுப்புகள், வானம், பூச்சிகள், தாவரம், ஊர்வன, பருவ காலம்.







**திறன் பகுதி**

**பொதுஅறிவு**

**திறன்**

பொது அறிவுக் கதைகள். காய்கள், பழங்கள், விலங்குகள், கடல் வாழ் உயிரினங்கள், நிறங்கள்,என் வீடு, என் குடும்பம்.







**திறன் பகுதி**

**உச்சரிப்பு**

**திறன்**


உச்சரிப்புப் பயிற்சி, வாக்கியங்களை தெளிவாக உச்சரித்தல்.



உச்சரிப்புப் பயிற்சி

- மயிலைப் போல ஆடினேன்.
- குயிலைப் போல பாடினேன்.
- கங்காருவைப் போல குதித்தேன்.
- யானையைப் போல அசைந்தேன்.
- பூனையைப் போல கத்தினேன்.

ஆசிரியர் குறிப்பு:
மாணாக்கரை தெளிவாக உச்சரிக்கப் பயிற்சி கொடுக்கவும். மனப்பாடம் செய்யத் தேவையில்லை.



உச்சரிப்புப் பயிற்சி

- காக்கா! காக்கா! பறந்து வா.
- கோழி! கோழி! கூவி வா.
- மயிலே! மயிலே! ஆடி வா.
- கிளியே! கிளியே! பேசி வா.
- குயிலே! குயிலே! கூவி வா.

ஆசிரியர் குறிப்பு:
மாணாக்கரை தெளிவாக உச்சரிக்கப் பயிற்சி கொடுக்கவும். மனப்பாடம் செய்யத் தேவையில்லை.

ஆசிரியர் குறிப்பு:

- தமிழ்த்தாய் வாழ்த்து
- கடந்த வாரம் பள்ளியில் படித்தது
- எழுதிப் பழகுக
- அந்த வாரத்திற்குரிய எழுத்தை கற்றறிதல்
- பொது அறிவு (எண்கள், விலங்குகள் ...)
- கதை அல்லது குழுவாக சேர்த்து கற்றறிதல்
- பாட்டு கற்றல்

கடந்த வாரம் பள்ளியில் படித்தது :

- ✓ எழுத்துக்களின் மீள்பார்வை
- ✓ கேள்வியின் மூலம் பதில் கூறச் செய்யவும்
- ✓ கடந்த வாரம் படித்த கதை மற்றும் பாட்டு
- ✓ அனைத்து மாணாக்கருக்கும் சந்தர்ப்பம் தரவும்

எழுதிப் பழகுக:

- ✓ எழுத்து மற்றும் அதற்குரிய படங்களை வரைந்து பழகுதல்
- ✓ கடந்த வாரம் படித்த எழுத்துக்கள் ஒரு சிறிய மீள் பார்வை
- ✓ அந்த வாரத்திற்குரிய எழுத்துக்களின் ஒலியைக் கூறி எழுத செய்யவும்

பொது அறிவு:

- ✓ அந்த வாரம் இருக்கும் பொது அறிவு பகுதிக்குரிய பொருட்கள் கொண்டு சிறு விளையாட்டுக்கள் மூலம் கற்பிக்கலாம்.
- ✓ விலங்குகள் - கரடி ,சிங்கம், புலி, முதலிய உருவ பொம்மைகள் கொண்டும் விளையாடலாம்.
- ✓ ரகசிய பெட்டி – விளையாட்டு

கதை மற்றும் குழுவாக கற்றல்:

- ✓ கடந்த வாரம் படித்த கதை மற்றும் குழுவாக கற்றல் பற்றி ஒரு சிறிய மீள்பார்வை.
- ✓ மாணாக்கரை குழுவாக பிரித்து நடித்துக் காட்ட செய்யலாம்.
- ✓ கதையில் வரும் கதாபாத்திரமாக நடித்து காட்டவும்.
- ✓ பொம்மைகள் கொண்டு கதை கூறலாம்.

பாடல்கள் :

- ✓ வட்டமாக நிற்க சொல்லவும்
- ✓ பாடல்களில் வரும் வரிக்கு எற்ற செய்கை செய்து , மாணாக்கரையும் செய்து காட்ட சொல்லலாம்
- ✓ கடந்த வாரங்களில் படித்த அனைத்து பாடல்களையும் சேர்த்து கற்கலாம்

Suggestions:

- ➢ Name tag
- ➢ Find their name tag
- ➢ Small projects related to that week
- ➢ Mystery box(ரகசிய பெட்டி)
- ➢ Collecting fruits , numbers and vegetables
- ➢ Circling letters from the magazine pages
- ➢ Small crafts – leaves collecting, making tree, flag, flower, etc
- ➢ Number of items in your house
- ➢ Family members
- ➢ Making Picture box
- ➢ Hand painting
- ➢ Coloring pages related to that week
- ➢ Making calendar
- ➢ Celebrating birthdays
- ➢ Copy of the story - cutting

- Bringing related materials related to the week class
- e.g., things to taste (for சுவைகள் class), Family members
- Making Picture box
- Hand painting
- Coloring pages related to that week
- Making calendar
- Celebrating birthdays
- Copy of the story - cutting
- Bringing related materials related to the week class

  e.g., things to taste (for சுவைகள் class), vegetables, fruits

Additional Resources:

Tamil work sheets - Uyir Eluthukkal & Mei Eluthukkal

Mazhalai Kalvi

Nila Nila Vaa song - Video

Tamil Rhymes Mambalamam Mambalamam - YouTube

Feedbacks:

mazhalai@amtaac.org

Or

***www.americantamilacademy.org/www.amtaac.org***

***Or***

***Email:support@amtaac.org***

